

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


-சமூக சீர்திருத்த மாத இதழ்-


THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 NOVEMBER

மலர்: 10 இதழ் : 2 நவம்பர் 2016 விலை : ரூ. 5




# மாமனிதர் பற்றி மேற்குலக மேதைகள்



● "முஹம்மது நபியின் நற்பண்புகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றிய அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன். இந்த நூற்றான்டின் இறுதிக்குள் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு விடும் என்று எதிர்பார்க்கிறேன்."

-பெர்னாட்ஷா-

● இஸ்லாத்தின் நிறுவனருடையதைக் காட்டிலும் அதிக ஆச்சரியம் தரக்கூடிய வாழ்க்கை முறை வரலாற்றிலே வேறெங்கும் இல்லை. அவரைப்போல் உலகத்தின் தலைவிதியில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்திய மனிதர்களைக் காணுதலும் அரிது.

- ஜி.ஜி. கெல்லட் -






● சர்வ சக்தியும் படைத்த இறைவன் தனக்குத் துணையாக நிற்கிறான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நபிகள் நாயகம் அவர்களுக்கு இல்லாதிருந்தால் இவ்வளவு பிரமாண்டமான சாதனைகளை அவர் சாதித்திருக்கமுடியாது.

- வில்லியம்மூர் -

● அறம் செய்வது எப்படி என்பதைப் பற்றி தெளிவாக திட்டவட்டமாக வரையறுத்துக் கூறிய ஒரே ஒரு சட்டமேதையாக விளங்குபவர் முஹம்மது நபி ஒருவரே.

- கிப்பன் –





● நபிகள் நாயகம் இவ்வுலகில் மக்களுக்குப்புரிந்த போதனைகள் அனைத்தும் உண்மை பொதிந்தவை.கருத்தாழம் மிக்கவை. விசுவாசம் கொள்ளத்தக்க வேதம் ஒன்றிருந்தால் அது நபிகள் நாயகத்துக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனேயாகும்.

-தாமஸ் கார்லைல்-

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 NOVEMBER**

**மலர்: 10 இதழ் : 2 நவம்பர் 2016 விலை : ரூ. 5**

## பொருளடக்கம்

அனைத்து உயிர்களையும்
அரவணைக்கும் ஷரீஅத் சட்டம் *2*
தர்மத்தை நிலைநாட்டும் இறைசட்டங்கள் *-4*
பெண் இனத்தைக் காக்கும்
வாழ்வியல் சட்டங்கள் *-7*
வரதட்சணை அரக்கனிடமிருந்து விடுதலை! *-8*
ஆணாதிக்க வஞ்சக வலை- *9*
பெண்மையின் புனிதம் காக்கும் ஹிஜாப் *-10*
எதிரி நாட்டுப் பெண்களின் உரிமை! *-11*
பெண்சிசுகொலை ஒரு வன்பாவம *-12*
திருமணம் ஒரு கடமை *-14*
ஆண்களும் வீட்டுவேலைகள் செய்யலாம் *-15*
பெண்களின் பாதுகாப்பிற்கே தலாக் *-16*
விவேகமான முறையில் விவாகரத்து *-19*
சவுதியில் இளவரசருக்கு
மரண தண்டனை நிறைவேற்றம் *-2*

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# அனைத்து உயிர்களையும் அரவணைக்கும் ஷரீஅத் சட்டம்

அனைத்து மனிதர்களுக்கும் ஜீவராசிகளுக்கும் அவரவர் உரிமைகளை நியாயமாகப் பங்கிட்டு வழங்கக்கூடிய ஒரு அமைப்பு (system) இருக்குமானால் அங்கு தொழிலாளர் உரிமை, பெண் உரிமை, குழந்தைகள் உரிமை, மிருகங்களின் உரிமை என்று தனித்தனியாகப் போராடவேண்டிய அவசியம் எழுவதில்லை.

ஒரு சமூகம் என்றால் அங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் இளைஞர் எனவும் தொழிலாளிகள், விவசாயிகள், வணிகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழில் முனைவோர் இன்னும் இதுபோன்ற பலரும் இருப்பார்கள். அங்கு பற்பல மொழிகள், நிறங்கள், இனங்கள், மதங்கள் மற்றும் கொள்கைகளைக் கொண்டவர்களும் இருப்பார்கள்


அப்படிப்பட்ட பலர் கலந்து வாழும் சமூகத்தில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால் மனித உறவுகள் வலுப்படவேண்டும். அத்துடன் சக மனிதர்களின் உரிமைகள் மதிக்கப்படவும் மீட்கப்படவும் வழங்கப்படவும் வேண்டும். மனித உரிமை மீறல்கள் கட்டுப்படுத்தப்படவும் வேண்டும். மட்டுமல்ல, இங்கு நம்மோடு வாழும் எண்ணற்ற ஜீவராசிகளுக்கும் அவற்றுக்கே உரிய உரிமைகள் இருப்பதை நாம் மறுக்க முடியாது. அவற்றை தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரமும் கிடையாது என்பதே உண்மை!

இவை அனைத்தின் உரிமைகளும் நியாயமான முறையில் பங்கீடு செய்யப்பட வேண்டுமானால் அதற்குரிய நுண்ணறிவும் அதிகாரமும் தகுதியும் இவ்வுலகைப் படைத்தவனும் இதன் சொந்தக்காரனுமான இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்பதை பகுத்தறிவு கொண்டு ஆராயும் எவரும் நிச்சயமாகக் கண்டுகொள்ள இயலும்.

அந்த இறைவன் தொகுத்து வழங்கும் வாழ்வியல் திட்டமே இஸ்லாம். இவை ஏட்டளவில் இல்லாமல் பேச்சளவில் நில்லாமல் இந்த வாழ்வியலை வாழ்க்கை நெறியாக ஏற்ற அனைவரிடமும் நடைமுறைக்குக் கொண்டுவருகிறது இஸ்லாம்.

திருக்குர்ஆனில் இறைவன் இதற்கான அடிப்படையை இவ்வாறு கற்பிக்கிறான்:

**மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**



(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அதாவது அனைத்து மனிதகுலமும் ஆதித் தந்தை மற்றும் ஆதித் தாயின் சந்ததிகளே, நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்பதையும் நம் அனைவருக்கும் ஒரே இறைவனே என்பதையும் அடிப்படையாக வலியுறுத்தி உலகளாவிய சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் நிறுவுகிறது திருக்குர்ஆன். தொடர்ந்து நாம் அனைவரும் அந்த இறைவனின் பரிபாலனத்திலும் கண்காணிப்பிலும் உள்ளோம் என்பதை உணர்த்தி நம் செயல்களுக்காக இறைவனால் மறுமை வாழ்வில் விசாரிக்கப்பட உள்ளோம் என்றும் எச்சரிக்கின்றது இந்த இறைவசனம். அதாவது இறைகட்டளைகளைப் பேணி வாழ்வோருக்கு சொர்க்கமும் பேணாதவர்களுக்கு நரகமும் வாய்க்க உள்ளன என்ற உண்மையையும் உள்ளடக்கி நிற்கிறது இவ்வசனம்.

**ஷரீஅத் என்னும் இறைச் சட்டம்**

ஆக அந்த இறைவன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான் நமது இம்மைக்கும் மறுமை வாழ்வுக்கும் நன்மை பயப்பது. அந்த அடிப்படையில் இறைவன் நமக்கு தொகுத்து வழங்கும் சட்டங்களுக்கே இறை சட்டங்கள் அல்லது ஷரீஅத் என்று வழங்கப்படும்.

இறைவனின் வேதம் மற்றும் அவனது தூதரின் முன்மாதிரி செயல்முறை விளக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவதே ஷரீஅத்.

ஷரீஅத் அளிக்கின்ற வரையறைகளும் சட்டங்களும் நமது தனிப்பட்ட வாழ்வையும், குடும்ப வாழ்வையும் வாழ்வின் எல்லாத் துறைகளையும் தழுவி இருக்கின்றன.

வணக்கங்கள், தனிநபர் நடத்தை, ஒழுக்கம், பழக்க வழக்கம், நடையுடை பாவனை,குடும்ப வாழ்வு, உண்ணுதல், பருகுதல், சமூகத் தொடர்புகள், பொருளாதார நடைமுறைகள், குடிமக்களின் உரிமைகள், நீதித்துறை, அரசியல் என எல்லாத் துறைகளுக்கும் நெறிமுறைகளை வகுத்துத் தருகிறது ஷரீஅத்.

ஷரீஅத் தொடாத வாழ்வியல் துறையே இல்லை எனலாம். எல்லாத் துறைகளுக்குமே எது நன்மையானது, எது தீமையானது என்பதையும், எது இலாபத்தை தரக் கூடியது, எது இழப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதையும், எது தூய்மையானது எது தூய்மையற்றது என்பதையும் ஷரீஅத் தெள்ளத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் கோடிட்டுக் காட்டி விளக்கி இருக்கிறது. ஒரு தூய்மையான வாழ்வுக்கான வரைபடத்தை அது நமக்குத் தருகிறது.

இன்று நம் நாட்டை அலைக்கழிக்கும் சட்டங்கள் மனிதர்களால் இயற்றப்பட்டவையும் பலமுறை திருத்தப்பட்டவையும் ஆகும். ஆனால் இறைவன் வழங்கும் சட்டங்கள் தொலைநோக்குள்ளவையும் மனிதகுலத்தின் அனைத்து அங்கங்களுக்கு மட்டுமல்ல அனைத்துப் படைப்பினங்களுக்கும் பொருத்தமானவையும் ஆகும். அவை நுண்ணறிவாளனும் நீதிமானுமான இறைவனால் வழங்கப்படும் சட்டங்கள் ஆகும்.

# உறவைப் பேணுபவர் யார்?

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “பதிலுக்குப் பதில் உறவாடுகின்றவர் (உண்மையில்) உறவைப் பேணுகிறவர் அல்லர், மாறாக உறவினர்கள் உறவை துண்டித்து வாழ்ந்தாலும் அவர்களுடன் இணைகின்றவரே உறவைப் பேணுபவர் ஆவார்.“ (நூல்: ஸஹீஹுல் புகாரி

# தர்மத்தை நிலைநாட்டும் இறைசட்டங்கள்



ஒன்றே குலம் ஒருவனே இறைவன் அவனிடமே மீட்சி என்ற அடிப்படைகளை மனித மனங்களில் விதைத்து நல்லொழுக்கம் நிறைந்த சமூகம் அமைந்து அங்கு இறைவன் தரும் சட்டங்களும் ஆட்சி செய்யுமானால் பின்வரும் வி'யங்கள் நடைபெறும்:

§ சுரண்டலுக்கும் பதுக்கலுக்கும் இலஞ்சம் ஊழல் போன்றவற்றுக்கும் வாய்ப்பு அளிக்காத பொருளாதார திட்டங்கள் நடைமுறைக்கு வரும். நாட்டின் செல்வம் செல்வந்தர்களுக்கு இடையில் மட்டுமல்லாமல் அனைவரிடையேயும் புழங்கும் வண்ணம் பொருளாதாரம் சீரமைக்கப்படும்.

§ செல்வந்தர்களிடம் நீதமான முறையில் ஜகாத்(ஏழைவரி) தவறாமல் வசூலிக்கப்படும். அது ஏழைகளைத் தேடிக் கண்டறிந்து அவர்களுக்கே விநியோகம் செய்யப்படும். இன்று நாட்டில் நிலவிலுள்ள 40% வருமான வரி விதிப்பின் விளைவாக உண்டாகும் கருப்புப்பணம், சுவிஸ் வங்கிகளில் பதுக்குதல் போன்றவை ஒழிந்து உள்நாட்டிலேயே அந்த பணம் புழங்க வழிவகை உண்டாகும். (செல்வந்தர்கள் இறைப் பொருத்ததிற்காக தானாகவே முன்வந்து ஜகாத்தை வழங்குவார்கள் என்பது வேறு விஷயம்)

§ வட்டியில்லா பொருளாதாரம் நடைமுறைக்கு வரும். வெற்றுப்பணம் குட்டிபோடுவதும் வங்கிகள் வெற்றுக்காகிதங்களை புழக்கத்தில் விட்டு லாபம் சம்பாதிப்பதும் நிற்கும். அதனால் பணத்துக்கு உண்மையான மதிப்பு உண்டாகி, பணவீக்கம், ஊக வாணிபம், மோசடிகள் ஒழிக்கப்படும். பணக்காரர்களை மேலும் பெரிய பணமுதலைகளாகவும் ஏழைகளை பரம ஏழைகளாகவும் மாற்றும் இன்றைய பொருளாதார அமைப்பு மாறி முனைவோர் அனைவருக்கும் தக்க வாய்ப்பளிக்கும் திட்டங்கள் அமுலுக்கு வரும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வந்து விட்டாலே நாட்டின் வறுமை ஒழிந்து நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து விடும் என்பதை சிந்திப்போர் அறியலாம்.

§ நிலச்சுவான்தார்கள் தமது சொத்துக்களை முடக்கியபடி இருக்க அனுமதிக்கப் படாது. ஒரு நிலம் மூன்றுவருடத்திற்கு மேல் “தரிசாகக் கிடக்க” அனுமதிக்காது. குத்தகை முறை தடை செய்யப்படும். அவ்வாறு இருக்குமாயின் அரசு அதனை உள்வாங்கி பிரித்துக் கொடுக்கும்.

§ சமூக நீதி நிலைநிறுத்தப்பட்டு மதம், ஜாதி, மொழி, இடம் அடிப்படையிலான பாகுபாடுகள் இல்லாமல் மக்கள் எல்லாருக்கும் சமமான வேலை வாய்ப்பும்,தொழில் மற்றும் வணிக வாய்ப்பும், கல்வி உரிமையும் வழங்கப்படும். சட்டங்கள் மூலம் குறிப்பிட்ட பிரிவினரின் நலன்களை மட்டும் உறுதிப்படுத்தும் நிலை மாறி மக்கள் எல்லாருக்கும் எல்லாவித உரிமைகளும் வாய்ப்புகளும் பாரபட்சமின்றி வழங்கப்படும்.

§ சமூகத்தில் ஏழைகள், முதியவர்கள், தேவையுள்ளவர்கள், அனாதைகள், விதவைகள், நாதியற்றவர்கள் போன்ற நலிவுற்ற மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பைத்துல்மால் - (அரசுக் கருவூலம்) அமைப்பு திறம்படச் செயல்படும். பஞ்சம், பட்டினி, இயற்க்கைச் சீற்றங்கள் போன்ற ஆபத்தான சூழலில் அனைத்து மாநிலங்களின் வளங்களும் உரிய முறையில் அதிகாரப்பூர்வமாக திருப்பப்படும்.

§ பண்புள்ள குடிமக்களை உருவாக்க பயனுள்ள கல்வியும் ஆளுமையை வளர்க்கத் தேவையான பயிற்சிகளும் இளம் பருவத்தில் இருந்தே புகட்டப்படும். நன்மை - தீமை நியாயம் - அநியாயம் போன்றவை பற்றிய விழிப்புணர்வு கற்கும் கல்வியோடு இணைந்து ஊட்டப்படுவதால் மாணவர்கள் கற்கும் கல்வி ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படும். அவை அழிவுகளுக்கு பயன்படாது.

§ கற்பனை பாத்திரங்களின் பெயராலும் மதங்களின் பெயராலும் நாட்டுவளங்களும் அரசு இயந்திரங்களும் வீணடிக்கப்படுவதும் மக்கள் அச்சுறுத்தப்படுவதும் முடிவுக்கு வரும்.

§ தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோருக்கு உரிய கூலி முறையாக தாமதமின்றி கொடுக்கப்படும். பொதுவாக இதுபோன்ற மனித உரிமைகள் அனைத்தும் முறைப்படி பேணப்படும். வரம்பு மீறல்கள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

§ குடும்ப உறவுகளையும் அமைதியையும் சீர்கெடுக்கும் விபச்சாரம் மது போதைப்பொருட்கள், சூதாட்டம் போன்றவை தடை செய்யப்படும்.

§ கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வன்குற்றங்களில் ஈடுபடுவோரை திருத்த முதற்கண் உரிய சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கப்பாலும் மீறுவோர் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள்.

§ பெண் இனத்தைப் பாதுகாக்க அவர்களுடைய கல்வி பெறும் உரிமை, மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, மஹர் என்னும் மணக்கொடை பெறும் உரிமை, சொத்துரிமை, போன்றவை சட்டரீதியாக வலுவாக்கப்படும். வரதட்சணை சட்டவிரோதமாகும்.

§ சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அவதூறு மற்றும் வதந்திகளைப் பரப்பும் மனிதர்களும் ஊடகங்களும் தங்கள் குற்றங்களுக்கான தண்டனைகளில் இருந்து தப்ப முடியாது. ஊர்ஜிதம் செய்யாமல் பரபரப்புக்காக பரப்பபடும் செய்திகளுக்கு பரப்பியவர்கள் மீது சட்டம் பாயும்.

இன்னும் இவை போன்ற பல புரட்சிகளும் அங்கு உடலெடுக்கும். ஷரீஅத் என்பது நீதி, நியாயம் மட்டுமல்ல அதை நடைமுறைப்படுத்தும் போது நாட்டின் செழிப்புக்கான வழிகள் அங்கு தானாகவே திறக்கின்றன. சட்டம் ஆளும் என்பதை விட மனித மனங்களின் ஒருமைப்பாடும் ஈடுபாடும் நாட்டு மக்களின் பொறுப்புணர்வும் அங்கு ஆட்சி செய்யும் என்பதே உண்மை!

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இறைவன் படைப்புகளை படைத்தபோது (தன்னுடைய) அரியாசனத்தின் மீது வைக்கப்பட்டிருந்த தன்னுடைய பதிவேட்டில், “என் கருணை என் கோபத்தை வென்றுவிட்டது“ என்று (கருணையைத்) தனக்குத்தானே விதியாக்கிக் கொள்ளும் வகையில் எழுதினான்” - இதைஅபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். (நூல்: புகாரி2223.)

# பெண் இனத்தைக் காக்கும் வாழ்வியல் சட்டங்கள்

இறுதி இறைவேதம் திருக்குர்ஆனும் அதை தன் வாழ்க்கை முன்மாதிரியாகக் கொண்டு நடைமுறையில் வாழ்ந்து காட்டியவருமான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னுதாரண வாழ்க்கையில் இருந்தும் பெறப்படுபவையே இஸ்லாமிய வாழ்வியல் சட்டங்கள். இவற்றை பேணுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். அரபுநாட்டில் நபிகளாரின் காலத்தில் நடைமுறைக்கு வந்த இந்த வாழ்வியல் சட்டங்கள் அன்று எவ்வாறு பெண்களை கொடுமைகளில் இருந்து விடுவித்ததோ அதே போல பிற்காலங்களில் எங்கல்லாம் இஸ்லாம் பரவியதோ அங்கெல்லாம் பெண்களை அவர்களின் மூதாதையர்களின் மூடப்பழக்க வழக்கங்கள் உண்டாக்கி வைத்த கொடுமைகளில் இருந்து விடுவித்தது, தொடர்ந்து விடுவித்துக் கொண்டு வருகிறது என்பதை நடைமுறையில் காணலாம்.



- **பிறப்புரிமை:**


இஸ்லாம் பெண்களுக்கு வழங்கும் முதல் உரிமை பிறப்பதற்கான உரிமை. பெண் குழந்தை என்றால் இழிவு எனக் கருதி அவர்களை உயிருடன் புதைக்கும் பழக்கம் அங்கு அராபியர்களிடம் இருந்து வந்தது. குழந்தைகளை கொலை செய்வதை குறிப்பாக பெண்குழந்தைகளை கொல்வதை கடுமையாக எச்சரித்து தடுத்தது. அதனை மறுமை வாழ்வுடன் தொடர்புபடுத்தி அச்சமூட்டுகிறான் இறைவன்:

**'உயிருடன் புதைக்கப்பட்ட (பெண்குழந்தையான)வளும் வினவப்படும் போது. எக்குற்றத்திற்காக கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது) (திருக்குர்ஆன் 82:8-9)**

இன்றும் நவீன உலகிலும் வேறுவகையில் தொடரும் இக்கொடூரத்தில் இருந்து கோடிக்கணக்கான பெண் ஆன்மாக்களைக் காப்பாற்றியது மற்றும் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறது இஸ்லாம். உலகமே அவர்களை வெறுத்தொதுக்கும்போது இவ்வுலகுக்கு அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்கக் கற்றுக்கொடுத்தது இஸ்லாம் என்றால் அது மிகையாகாது.

- **கற்கும் உரிமை:**

கல்வி கற்பதற்கான உரிமையை வழங்குவதோடு நின்றுவிடாமல் அதை கடமையாக்கியது இஸ்லாம். “அறிவைத் தேடுவது ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாயமாகும்” என்று அறிவித்து நடைமுறைப் படுத்தினார் நபிகள் நாயகம்(ஸல்). அன்னாரின் துணைவியார் ஆயிஷா அம்மையார் மாபெரும் மார்க்க மேதையாக திகழ்ந்தார் என்பதை நபிமொழி பதிவுகள் சான்று கூறுகின்றன.



- **மானிட சமன்பாடு :**

பெண்கள் மனித இனமா, பெண்களுக்கு ஆன்மா உண்டா என்றெல்லாம் பிற சமூகங்களில் விவாதம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், ஆண்களும்

பெண்களும் சமமே, அவர்கள் ஒரே ஆண்-பெண்ணிலிருந்து தோன்றியோர் என்பதை தெளிவாக எடுத்துரைத்து இந்த இழிவுக்கு முடிவு கட்டியது இஸ்லாம். அவர்களோடு உள்ள சகோதரத்துவத்தையும் உறுதிப்படுத்தி இறுதிநாள் வரை பின்பற்ற அடித்தளமிட்டது இஸ்லாம்.

**'மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனை பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவரது மனைவியைப் படைத்தான். பின்னர், அவர்கள் இருவரிலிருந்தும் பல ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்'. (திருக்குர்ஆன் 4:1)**

### ● ஆன்மீக அந்தஸ்து:

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் ஆன்மீகத்தில் சம அந்தஸ்த்தையும் உரிமைகளையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. நன்மையான செயல்களுக்கான கூலி இரு சாராருக்கும் சமமாக வழங்கப்படுகிறது.

**33:35. நிச்சயமாக இறைவனுக்கு கீழ்படியும் ஆண்களும், பெண்களும் நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும் உண்மையே பேசம் ஆண்களும், பெண்களும் பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும் (அல்லாஹ்விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும், பெண்களும் தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும் தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் - ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்.**

### ● பொருளாதார உரிமை:

பெண்களின் உயிர், கண்ணியம் சொத்து ஆகியவற்றிற்கான உரிமைகள் ஆண்களைப் போன்றே வழங்கப்படுகின்றன. சொத்துக்களை வைத்திருப்பதற்கு மாத்திரமன்றி, அவற்றை விற்கவோ, வாங்கவோ பூரண சுதந்திரம் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**'இறந்து போன பெற்றேரோ, நெருங்கிய உறவினரோ விட்டுப்போன பொருட்களில் ஆண்களுக்கு பாகமுண்டு. அவ்வாறே பெண்களுக்கும் பாகமுண்டு' (திருக்குர்ஆன் 4:7)**

### ● பொருளீட்டும் உரிமை:

ஆண்களைப்போன்றே பெண்களுக்கும் பொருளீட்டும் சமத்துவத்தை இஸ்லாம் முன்வைத்தது.

**'ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவை உரியன. பெண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவை உரியன.(திருக்குர்ஆன் 4:32)**

### ● ஆளுமைக்கு மதிப்பு:

ஒருவர் இறந்து போனதும் அவரது சொத்துக்களை வாரிசு சொத்துக்களாக பங்கிடுவது போல இறந்து போன மனிதரின் மனைவியரை பங்கிட்டுக்கொள்ளும் தீயபழக்கம் இஸ்லாம் வருவதற்கு முன் அரபு சமுகத்தில் காணப்பட்டது. மனிதாபிமானமற்ற இந்த பாரம்பரியத்தை இஸ்லாம் அழித்தொழித்து, பெண்ணின் ஆளுமைக்கு மதிப்பும், கண்ணியமும் வழங்கியது.

**'விசுவாசம் கொண்டோரே! பெண்களை பலவந்தமாக நீங்கள் அனந்தரம் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல' (4:19)**

# வரதட்சணை அரக்கனிடமிருந்து விடுதலை!

நம் நாட்டில் பெண்குழந்தை பிறந்தாலே பெற்றோர் பயப்படுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று வரதட்சணை! பல உயிர்களைக் காவு வாங்கிய இக்கொடிய அரக்கனிடம் இருந்து பெண்களையும் அவர்களைப் பெற்றோரையும் விடுவிக்கிறது இஸ்லாம்.

இஸ்லாம் திருமணத்தை ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் என்ற எளிய சித்தாந்தமாக உலகிற்கு அறிமுகப் படுத்தியது. திருமண உறவில் தன்னை மணக்கும் மணவாளனை தேர்வு செய்யும் உரிமையையும், வரதட்சணைக்கு எதிராக மஹர் என்னும் மணக்கொடையை கேட்கும் உரிமையையும் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. திருமணத்திற்கு பெண்ணின் சம்மதத்தை கட்டாயமாகியது.

- '...அவர்களை திருமணம் விஷயத்தில் நிர்பந்திக்கூடாது..'

(திருக்குர்ஆன் 17:31)

- 'நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக்கொடையை) மகிழ்வோடு கொடுத்து விடுங்கள்.'

(திருக்குர்ஆன் 17:31)

- **விவாகரத்து உரிமை:**

இஸ்லாம் ஆண்களுக்கு மாத்திரமன்றி பெண்களுக்கும் தான் விரும்பாத போது கணவனிடமிருந்து விவாகரத்து பெறும் உரிமையை வழங்குகிறது.

- **கனிவோடு நடத்த கட்டளை:**

பெண்களுடன் அன்பாகவும், கனிவுடனும் நடக்குமாறு இஸ்லாம் ஏவுகின்றது.

**4:19.** நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப் பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு கூடாது. பகிரங்கமான கெட்ட செயலை அவர்கள் செய்தாலொழிய, பெண்களுக்கு நீங்கள் கொடுத்ததிலிருந்து சிலவற்றை எடுத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் (துன்பம் கொடுத்து) தடுத்து வைக்காதீர்கள். இன்னும், அவர்களுடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள் - நீங்கள் அவர்களை வெறுத்தால் (அது சரியில்லை ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும் அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்தி விடலாம்.

- **மானத்திற்கு பாதுகாப்பு :**

பெண்களது மானத்திற்கான உரிமையையும் உத்தரவாதத்தினையும் இஸ்லாம் வழங்குகிறது.


'எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி, (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டுவராவிட்டால், அவர்களை நீங்கள் 80 கசையடி அடியுங்கள். பின்னர் அவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். ஏனெனில், நிச்சயமாக அவர்கள் வரம்பு மீறியவர்கள்'. (திருக்குர்ஆன் 24:4)

- **சாட்சி கூறும் உரிமை:**

பெண் பெண்ணாக மதிக்கப்படாத காலத்திலேயே அவள் சாட்சியம் சொல்லக்கூடிய அளவிற்கு உயாந்தவர்கள் என்று அவளை உயர்த்தி அந்த உரிமையையும் இறைவன் வழங்கியுள்ளான்.

'... கடனுக்கு பெண்கள் இருவரை சாட்சியாளர்களாக எடுத்துக் கொள்ளுங்கள்..'' (திருக்குர்ஆன் 2: 282)

# ஆணாதிக்க வஞ்சக வலை!



அந்நியனின் கருவை கற்பத்தில் சுமந்தார்கள் அவர்கள்.. சுமந்த கருவை கொன்றொழிக்க மருத்துவமனைகளுக்கு இரகசியமாகச் சென்றார்கள்.. அனுபவித்த வேதனைகளை உள்ளுக்குள் புதைத்து மூடினார்கள்.. அரவணைத்திருந்த பெற்றோர்கள் வீடுகளை விட்டுத் துரத்தினார்கள். கருவைப் புதைத்த காமுகர்கள் காணாத தூரம் போனார்கள்... அனைத்தையும் மீறிப் பிறந்தவற்றை தந்தைகளின்றி வளர்க்கும் நிலைக்கு ஆளானார்கள்.

உடல் ரீதியாக அனுபவிக்கும் வலிகளுக்கும் மன உளைச்சலுக்கும் அப்பால் சமூகத்தின் ஏச்சும் பேச்சும், அவமானமும் இவர்களை அலைகழித்தது. ...

மன உளைச்சல்,கண்ணீர், விரக்தி, நிராசை, தற்கொலை என அனைத்தும் அரங்கேறின, இன்னும் அன்றாடம் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன. ..... எல்லாம் எதனால்?

பெண்ணுரிமை, பெண்விடுதலை, பெண்ணியம் என்று கூறி ஆணாதிக்க வஞ்சகர்கள் விரித்த வலையில் அநியாயமாக அகப்பட்ட காரணத்தால்!

பெண்களின் உடலை விளம்பர மற்றும் வியாபாரச் சரக்காக்கி தங்கள் சுயநல வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளும் ஆண்களும் அதற்கு துணைபோகும் பெண்களும் பெண்ணடிமைத்தனத்தையே வளர்த்து வந்துள்ளார்கள் என்பதே உண்மை! பெண்ணியம் என்ற பெயரில் உடைகளைக் களைவதுதான் பெண்விடுதலை என்ற மாயையை உண்டாக்கி பெரும்பாலானோரை அவர்கள் வழிகெடுக்கச் செய்தனர். பெரும்பாலான அபலைகளை மேற்கண்ட விபரீதங்களுக்கு உள்ளாக்கினர்.

பலவந்தமாக நடக்கும் பாலியல் வல்லுறவுகளுக்கு ஆளானோருக்கு ஆதரவாகக் குரல்கொடுக்க ஆட்களும் ஊடகங்களும் திரண்டு வருவதை நாம் காண முடிகிறது. ஆனால் இந்த வஞ்சக வலையில் வீழ்ந்ததன் காரணமாக நரக வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் அபலைகளுக்கு ஆதரவாக வருவோர் யாரும் இல்லை... ஏன் அந்தப் பெண்ணுரிமை வாதிகளும் கூட வருவதில்லை.

## இஸ்லாம் என்ற வரப்பிரசாதம்

ஆனால் உண்மையில் பெண்ணை இந்த ஆணாதிக்கத்தின் உச்சகட்டக் கொடுமையில் இருந்து காப்பாற்ற அவளைப் படைத்த அவளது உணர்வுகளை நன்கறிந்த அவளது நலனில் பேரார்வம் கொண்ட அவளது இரட்சகன் அவளுக்கு பரிந்துரைக்கும் பாதுகாப்புக் கவசமே ஹிஜாப் என்ற ஆடை ஒழுக்கம். பெண்ணுக்கு வழங்கப்படும் இந்த பாதுகாப்பு முழு சமூகத்தையும் பாதுகாக்கும் அரணாக அமைகிறது என்பதை சிந்திப்போர் அறியலாம்!

**'நபியே! உம் மனைவியர்க்கும் உம் புதல்வியர்க்கும் இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் அவர்கள் தம் முக்காடுகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக !அவர்கள் (கண்ணியத்திற்கு உரியவர்களாக) அறியப்படுவதற்கும் (பிறரின்) தொல்லைக்கு உள்ளாகமலிருப்பதற்கும் இது ஏற்றதாகும் (அல்குர்ஆன் 33.59)**

# பெண்மையின் புனிதம் காக்கும் ஹிஜாப்

மனித சமுதாயத்தின் விளைநிலங்களே பெண்கள். சமுதாயம் ஆரோக்கியமாக அமைய வேண்டுமானால் நல்லொழுக்கங்கள் குழந்தைப் பருவத்தில் இருந்தே மக்களுக்கு கற்பிக்கப்பட்டு நடைமுறையோடு பயிற்றுவிக்கப்பட வேண்டும். நன்மை, தீமை, நியாயம், அநியாயம், சக மனிதர்களோடு கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள், சமூகத்துக்கு ஆற்றவேண்டிய கடமைகள் போன்ற பலவும் அங்கு கற்பிக்கப்பட்டால்தான் பொறுப்புணர்வுள்ள குடிமக்கள் உருவாகுவார்கள். இங்கு தந்தையை விட தாயின் தாக்கமே மிக அதிகம் என்பதை நாம் அறிவோம். இப்பொறுப்பை சரிவர நிறைவேற்றுவதில் இருந்து அவள் திசைதிருப்பப்பட்டால் அங்கு நடைபெறும் விபரீதங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

மேலும் சமூகத்தில் ஆண் பெண் இரு பாலாரும் கல்வி, தொழில், வணிகம் போன்ற விடயங்களில் அன்றாடம் கலந்துறவாடுவது என்பது தவிர்க்க முடியாததாகும். அப்போது அவர்களுக்கு இடையே அமைந்த பரஸ்பர கவர்ச்சி அவர்களின் செயல்பாட்டில் இருந்து திசை திருப்பாமல் இருப்பது முக்கியமாகும். இவைபோன்ற பல விடயங்களையும் கருத்திற்கொண்டே ஹிஜாப் என்ற ஆடை ஒழுக்கம் பரிந்துரைக்கப்படுகிறது.



### ஹிஜாப் என்றால் என்ன? எதற்கு?

தாய்மை என்ற உலகிலேயே உயர்ந்த விலைமதிக்கமுடியாத பதவியை அவளுக்கு வழங்குவதற்காகவும் அப்பதவியை அவள் செவ்வனே நிறைவேற்றுவதற்காகவும் அதன்மூலம் ஒரு ஆரோக்கியமான சமூக அமைப்பை சமைத்திடவும் அடித்தளமிடுவதே ஹிஜாப்!

ஹிஜாப் என்னும் அரபிச் சொல்லுக்கு திரை, தடுப்பு என்று பொருள்படும். ஹிஜாப் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது...

'(நபியே ) இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கு அவர்கள் தம் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் கூறுவீராக ! அவர்கள் தமது அலங்காரத்தில் (இயல்பாக )வெளியே தெரிபவற்றைத் தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். மேலும் தமது முக்காடுகளை (நீட்டி)த் தம் மார்பின்மேல் போட்டு(மறைத்துக்) கொள்ளட்டும்'(அல்குர்ஆன் 24:31)

மேலும் ஒரு வசனத்தில் குறிப்பிடும் போது...

'நபியே! உம் மனைவியர்க்கும் உம் புதல்வியர்க்கும் இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் அவர்கள் தம் முக்காடுகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக !அவர்கள் (கண்ணியத்திற்கு உரியவர்களாக) அறியப்படுவதற்கும் (பிறரின்) தொல்லைக்கு உள்ளாகமலிருப்பதற்கும் இது ஏற்றதாகும் (அல்குர்ஆன் 33.59)

ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவர் உடல் இயற்க்கைக்கு ஏற்றவாறு அந்நிய ஆண்கள் அல்லது பெண்களின் முன்னிலையில் வரும்போது கட்டாயமாக மறைக்கவேண்டிய உடலின் பகுதிகளை வரையறை இட்டுக்

கூறுகிறது இஸ்லாம். ஆண்களைப் பொறுத்தவரை மறைக்க வேண்டிய பகுதி முழங்காலுக்கும் தொப்பிளுக்கும் இடைப்பட்ட அனைத்தும் ஆகும். பெண்களுக்கு அது முகமும் முன்கையும் தவிர உள்ள அனைத்தும் ஆடைகொண்டு மறைக்கப்பட வேண்டியதாகும்.

### ஹிஜாப் பெண்ணடிமைத்தனமா?

பெண்ணுக்கு கண்ணியத்தை கொடுப்பதற்கு இறைவன் பரிந்துரைத்த இந்த உயர்ந்த ஆடை ஒழுக்கத்தைத்தான் சிந்திக்காதவர்கள் பெண்ணடிமைத்தனம் என்று விமர்சித்தார்கள். உண்மைதான் என்ன?

தாய்மை என்ற பொறுப்பை சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக பெண்களை வீட்டிற்கு வெளியே செல்லக்கூடாது என்று முடக்கிப் போடவில்லை இஸ்லாம். கல்வி, தொழில், சம்பாதித்தல் போன்ற அனைத்து உரிமைகளையும் அவர்களுக்கு முறைப்படி வழங்கி அவற்றை பாதுகாப்பான முறையில் நிறைவேற்றிக்கொள்ள மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை ஏற்பாடுதான் ஹிஜாப் என்பதை சிந்திப்போர் யாரும் அறியலாம். பெண்ணின் உடலழகும் கவர்ச்சியும் அவளுக்கு எதிரியாக மாறாமல் இருக்க ஹிஜாப்தான் பாதுகாப்புக் கவசம்.

# எதிரி நாட்டுப் பெண்களின் உரிமை!

இஸ்லாம் பெண்களுக்குத் தேவையான சகல உரிமைகளும் அவர்கள் கேட்காமலே அதற்காக அவர்கள் போராடாமலேயே அவர்களுக்கு வழங்கி கவுரவித்தது. உலகெங்கும் பெண்ணடிமைத்தனம் கோலோச்சிக் கொண்டிருந்த காலத்தில் பெண்ணுக்காக யாரும் பரிந்து கூட பேச முன்வராத காலத்தில் அவளது உரிமைகளை உணர்த்தியது. ஆணாதிக்கத்தின் பிடியில் இருந்து விடுவித்தது. இவற்றை எல்லாம் மீறிய இன்னொன்றையும் கவனியுங்கள்...

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பெண்களின் உரிமையை மட்டுமல்ல ... எதிரி நாட்டுப் பெண்களின் உரிமையையும் கூட பேண வலியுறுத்துகிறது இஸ்லாம்! போரில் எதிரி நாட்டோடு எப்படியும் அணுகலாம், அவர்களை எப்படி வேண்டுமானாலும் அழிக்கலாம் என்ற எந்த வரம்பும் வரையறுக்கப்படாத காலகட்டத்தில் இல்லை இல்லை இப்படித்தான் அணுகவேண்டும் என்று யுத்த தர்மங்களை அறிமுகப்படுத்தியது இஸ்லாம். அங்கு போரில் ஈடுபடாத பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், அங்கவீனர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் நடந்து கொள்வதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக நபி (ஸல்) கூறும் போது, “வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள், பெண்கள், ஆகிய யாவரையும் கொல்லாதீர்கள்“ (அபூதாவூத்)

ஒரு போரின்போது தரையில் ஒரு பெண்ணின் சடலம் வீழ்ந்து கிடப்பதைக் கண்ட நபியவர்கள் கூறினார்கள், “இவள் போர் செய்யவில்லை. பின் ஏன் இவள் கொலைக்கு ஆளானாள்?“ என்று கடுமையாக கடிந்து கொண்டார்கள்..

ஆம், எதிரிகளை வெல்வது அல்ல இஸ்லாத்தின் நோக்கம். மாறாக அவர்களை சீர்திருத்தி பூமியில் தர்மத்தை நிலைநாட்டுவதே. எனவே அவர்களுக்கு இறைவன் பூமியில் வழங்கிய உரிமைகளை அவர்கள் எதிரிகள் என்ற காரணத்துக்காக மீறுவதும் தடை செய்யப்பட்ட ஒன்றுதான். இதுதான் இஸ்லாம்!

அனைவரையும் படைத்து பரிபாலித்துவரும் அளவற்ற அருளாளன் அருளிய மார்க்கமே இஸ்லாம் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

# பெண்சிசுகொலை ஒரு வன்பாவம்

இந்திய குற்றவியல் ஆவணக்காப்பகத்தின் படி நம் நாட்டில் ஒவ்வொரு வருடமும் 1 மில்லியன் பெண் கருக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் அழிக்கப்படுகிறன. வருடம்தோறும் இந்த எண்ணிக்கை உயர்ந்து கொண்டே செல்கின்றது. பலரும் சர்வசாதாரணமாக இக்கொடும் குற்றத்தை செய்கிறார்கள் என்பதற்காகவோ நாட்டுமக்களோ அரசாங்கமோ இதைக் கண்டுகொள்ளவில்லை என்பதற்காகவோ இக்குற்றத்தைச் செய்தவர்கள் அதற்குரிய தண்டனையைப் பெறாமல் தப்பித்து விடுவதில்லை. ஏனெனில் அனைத்தையும் கண்காணித்துக்கொண்டிருக்கும் இவ்வுலகத்தின் சொந்தக்காரனான இறைவன் இதைப்பற்றி தனது இறுதிவேதத்தில் இவ்வாறு கூறுகிறான்:



**● உயிர்கள் ஒன்றிணைக்கப்படும் போது- உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும் போது- ''எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது?'' என்று- (திருக்குர்ஆன் 81:7-9)**

அதாவது மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று அவர்களால் கொல்லப்பட்ட குழந்தைகளே அவர்கள் செய்த குற்றத்திற்கு சாட்சியாக நிற்பார்கள் என்கிறது இந்த இறைவசனம். இன்று பெண்குழந்தைகள் என்றால் ஸ்கேன் செய்து பார்த்து கொல்லும் பெற்றோர்கள் நாளை மறுமை நாளில் தண்டனைக்குள்ளாவார்கள் என்கிறது இது.

## செயல்கள் பதிவாகின்றன

உண்மையில் இது இறைவனுக்கு சொந்தமான உலகம். இதை ஒரு தற்காலிக பரீட்சைக் கூடமாக இறைவன் படைத்துள்ளான். இதில் நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் பதிவாகின்றன. அவற்றுக்கு இறுதித் தீர்ப்பு நாளன்று விசாரணையும் உண்டு. இவ்வுலகில் நாம் இறைவனுக்குக் கீழ்படிந்து வாழக் கடமைப்பட்டுள்ளோம். இதில் தான்தோன்றித்தனமாக வாழவோ சட்டங்கள் இயற்றவோ இறைவன் மனிதனுக்கு அதிகாரம் வழங்கவில்லை என்பதை நாம் அடிப்படையாக உணரவேண்டும். அவன் விதித்த கட்டளைகளை மீறி வாழ்ந்ததன் விளைவுகளே இன்று நாம் கண்டுவரும் கொடுமைகள்.

ஒருவேளை நாம் இவ்வுலகில் நம் அத்துமீறல்களுக்கான தண்டனையைப் பெறாவிட்டாலும், மறுமை வாழ்வில் அதைப் பெற்றேயாக வேண்டும்.

கண்ணுக்குத் தெரியும் உயிராயினும் தெரியாத உயிராயினும் சரி பெரிதாயினும் சிறிதாயினும் அவற்றை அநியாயமாக நோவினை செய்தாலோ அல்லது கொன்றாலோ அது இறைவனிடம் பாவமே! மறுமை நாளில் அதற்கான விசாரணை உண்டு. அந்த வகையில் எல்லாவிதமான சிசுக்கொலைகளுக்கும் தண்டனை உண்டு என்று இறைவன் எச்சரிக்கிறான்:

**● நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை**

வசதிகளையும்) அளிக்கின்றோம் - அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும். (திருக்குர்ஆன் 17:31)

## இஸ்லாம் என்ற வரப்பிரசாதம்

இவ்வுலகைப் படைத்து பரிபாலிக்கும் இறைவன் வகுத்து வழங்கும் வாழ்க்கை நெறியே இஸ்லாம் என்று அரபி மொழியில் அறியப்படுகிறது. பெண் சிசுக்கொலையை மட்டுமல்ல, அதற்கு இட்டுச்செல்லும் அனைத்து விடயங்களையும் உரியமுறையில் தடை செய்கிறது இஸ்லாம். பெண்சிசுக்கொலைகள் நடைபெறுவதற்கு முக்கிய காரணம் வரதட்சணை. திருமணத்தின்போது வரதட்சணைக்கு நேர் எதிராக மஹர் என்னும் மணக்கொடையை மணமகன் மணமகளுக்கு வழங்குவதை கட்டாய கடமை ஆக்கியுள்ளது இஸ்லாம்.

பெண் என்பவள் ஒரு விலைமதிப்பற்ற பொக்கிஷம், அவளை அடைய வேண்டுமானால் அதற்காக ஆண் உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, திருமணத்தின் மூலம் உண்டாகும் அனைத்து செலவினங்களையும் குடும்பத்தின் பராமரிப்பையும் ஏற்பதை ஆணின்மீது சுமத்துகிறது. பெண்ணுக்கு ஆணுக்கு சமமான உரிமைகளை வழங்கும் அதேவேளையில் அவளை காட்சிப் பொருளாக்கியும் கடைசரக்காக்கியும் இளமையிலேயே அவளது கற்பை சூறையாட நினைக்கும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்க உரிய உடை ஒழுக்கத்தையும் ஆண் பெண் உறவு வரம்புகளையும் கற்ப்பிக்கிறது. இவ்வாறு பெண்ணைப் பெற்றவர்களின் தாழ்வு மனப்பான்மையை நீக்கி அவர்களைப் பெருமை மிக்கவர்களாக சமூகத்தில் உயர்த்துகிறது இஸ்லாம்!

குழந்தைகள் வெறுக்கப்படவோ தவிர்க்கப் படவோ வேண்டியவர்கள் அல்ல, மாறாக அவர்கள் அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகள் அரிய பொக்கிஷமாக கருதி போற்றி வளர்க்கப்பட வேண்டியவர்கள் என்கிறது இஸ்லாம்.

இறைவனின் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● ”ஒருவருக்கு பெண் குழந்தை பிறந்து விட்டால் அந்த இடத்திற்கு இறைவன் வானவர்களை அனுப்புகிறான். அவர்கள் அங்கு கூறுவார்கள்: ”வீட்டில் உள்ளவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்” பின்னர் அக்குழந்தையை தன் இறக்கைகளால் அரவணைத்துக் கொள்கிறார்கள். மேலும் அதன் தலை மீது கரங்களால் தடவியவாறு கூறுகின்றார்கள் ”இது ஒரு பலவீனமான ஆன்மாவாகும். இக்குழந்தையை பாதுகாத்து வளர்ப்பவருக்கு மறுமைநாள் வரையில் இறைவனின் உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும்” அறிவிப்பாளர்: நபித் இப்னு ஷுரைத் (ரலி)

*ஆதாரம்: அல்முஅஜமுஸ் ஸகீர் 243*

‘● எவருக்கு பெண் பிள்ளைகள் இருந்து அவர்களை அன்பு காட்டி அடைக்கலம் கொடுத்துபொறுப்புடன் நடத்துவாரோ அவருக்கு சுவர்க்கம் கடமையாகி விட்டது’ என்றார் நபிகளார்

(ஆதாரம்:அஹ்மத்)

பெண் குழந்தைகளை ஒழுக்கமான முறையில் வளர்த்து ஆளாக்கும் போது அதுவே இம்மையில் தொடர்ந்து இறை உதவி கிடைப்பதற்கும் மறுமையில் நாம் சொர்க்கத்திற்கு செல்வதற்கும் காரணமாகி விடுகிறது என்பதை நாம் அறியலாம்.

# திருமணம் ஒரு கடமை

**● நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன. (அல்குர்-ஆன் 30:21)**

ஆணையும் பெண்ணையும் அவர்களுக்கிடையே ஈர்ப்பையும் உருவாக்கிய இறைவன் திருமணம் செய்வதை கட்டாயக் கடமையாக வலியுறுத்துகிறான். ஆரோக்கியமான சமூக அமைப்பு உருவாக அது ஒரு முதல்படி.. இறைவன் கூறுகின்றான்:

**● உங்களில் வாழ்க்கைத் துணையற்றவர்களுக்கும், நல்லோரான உங்களின் ஆண் அடிமைகளுக்கும், பெண் அடிமைகளுக்கும் திருமணம் செய்து வையுங்கள்! அவர்கள் ஏழைகளாக இருந்தால் இறைவன் தனது அருளால் அவர்களைத் தன்னிறைவு பெற்றோராக ஆக்குவான். இறைவன் தாராளமானவன் அறிந்தவன். (அல்குர்ஆன் 24 : 32)**

பொறுப்புணர்வோடு இல்லறத்தை அனுபவிக்க திருமணம் செய்து கொள்ளுமாறு வாலிபர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.:

● நபித்தோழர் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் சொன்னார்கள்:

நாங்கள் வசதி வாய்ப்பு ஏதுமில்லாத இளைஞர்களாக நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் "இளைஞர்களே! திருமணம் செய்துகொள்ள சக்தி பெற்றோர் திருமணம் செய்துகொள்ளட்டும். ஏனெனில், அது தகாத பார்வையைக் கட்டுப்படுத்தும் கற்பைக் காக்கும்.. அதற்கு இயலாதோர் நோன்பு நோற்றுக்கொள்ளட்டும்! ஏனெனில், நோன்பு (ஆசையைக்) கட்டுப்படுத்தக் கூடியதாகும்" என்று சொன்னார்கள். (புகாரி 5066)

## துறவறத்திற்கு அனுமதி இல்லை

துறவறம் மேற்கொண்டு வெற்று ஆன்மீகத்தை மக்களுக்கு போதிக்கக் கூடியவர்களாக இறைவன் தன் தூதர்களை அனுப்பவில்லை. மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களின் சுகதுக்கங்களை அவர்களோடு கலந்து அனுபவித்து அவர்களுக்கு முன்மாதிரிப் புருஷர்களாகத்தான் இறைத்தூதர்கள் வாழ்ந்து சென்றார்கள்.

**● உமக்கு முன் தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கு மனைவியரையும், மக்களையும் ஏற்படுத்தினோம். (அல்குர்ஆன் 13 : 38)**

அந்த இறைத்தூதர்கள் வரிசையில் இறுதியாக வந்த நபிகள் நாயகமும் திருமணம் செய்து அதையே தன் மக்களுக்கும் போதித்தார்கள். எவரேனும் திருமணம் செய்துகொள்ள சக்தியிருந்தும் திருமணம் செய்துகொள்ளாவிட்டால் அவர் தன்னைச் சார்ந்தவர் இல்லை என நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கவும் செய்தார்கள்

● அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறினார்கள் :

நபி (ஸல்) அவர்களுடைய துணைவியரின் வீடுகளுக்கு மூன்று பேர் கொண்ட குழுவினர் வந்து நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் குறித்து வினாத் தொடுத்தனர். அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போது, அவர்கள் நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகளை ஒப்பிட்டு நோக்கினார்கள். . பிறகு, "முன்பின் தவறுகள் மன்னிக்கப்பட்டுவிட்ட நபி (ஸல்) அவர்கள் எங்கே? நாம் எங்கே? என்று சொல்லிக்கொண்டனர். அவர்களில் ஒருவர், "(இனிமேல்) நான் என்ன செய்யப் போகிறேன் என்றால், எப்போதும்

இரவில் தொழுதுகொண்டே இருக்கப்போகிறேன்"" என்றார். இன்னொருவர், "நான் ஒருநாள் கூட விடாமல் காலமெல்லாம் நோன்பு நோற்கப் போகிறேன்"" என்று கூறினார். மூன்றாம் நபர் "நான் பெண்களை விட்டும் ஒதுங்கியிருக்கப் போகிறேன். ஒருபோதும் மணமுடித்துக் கொள்ளமாட்டேன்"" என்று கூறினார்.

பின்னர் இதைக் கேள்விப்பட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், (அந்தத் தோழர்களிடம்) வந்து, "இப்படி இப்படியெல்லாம் பேசிக்கொண்டது நீங்கள்தாமா? அறிந்துகொள்ளுங்கள்: இறைவன் மீதாணையாக! உங்களைவிட அதிகமாக நான் இறைவனை அஞ்சுபவன் ஆவேன். இறைவனை பயந்து நடப்பவன் ஆவேன். ஆயினும், நான் நோன்பு நோற்கவும் செய்கிறேன், விட்டுவிடவும் செய்கிறேன் தொழுகவும் செய்கிறேன், உறங்கவும் செய்கிறேன் மேலும், நான் பெண்களை மணமுடித்தும் உள்ளேன். ஆகவே, என் வழிமுறையை யார் கைவிடுகின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்" என்று சொன்னார்கள்.

திருமணம் செய்ய சக்தி இருந்தும் அதை செய்து கொள்ளாதவன் துறவறத்தை மேற்கொள்பவனாவான்..

● **தாமாகவே துறவறத்தை உருவாக்கிக் கொண்டனர். அதைக் கூட பேண வேண்டிய விதத்தில் பேணவில்லை. இறை திருப்தியைத் தேடுவதைத் தவிர (வேறெதையும்) அவர்கள் மீது நாம் விதியாக்கவில்லை. அவர்களில் நம்பிக்கை கொண்டோருக்கு அவர்களின் கூலியைக் கொடுத்தோம். அவர்களில் அதிகமானோர் குற்றவாளிகள். (அல்குர்ஆன் 57 : 27)**

இந்த துறவறத்தை நபி (ஸல்) அவர்களும் தடைசெய்தார்கள்.

● சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள் :

உஸ்மான் பின் மழ்ஊன் (ரலி) அவர்கள் துறவறம் மேற்கொள்ள (விரும்பி அனுமதி கேட்ட போது) நபி (ஸல்) அவர்கள் அனுமதி மறுத்தார்கள். அவருக்கு (மட்டும்) நபி (ஸல்) அவர்கள் அனுமதியளித்திருந்தால் (ஆண்மை நீக்கம் செய்து கொள்வதற்காக) நாங்கள் காயடித்துக் கொண்டிருப்போம்.

புகாரி *(5073)*

# ஆண்களும் வீட்டுவேலைகள் செய்யலாம்

வீட்டு வேலைகள் அனைத்தும் பெண்கள் செய்ய வேண்டியவை என்று இஸ்லாம் கூறவில்லை. சமையல் செய்தல், சமையலுக்குத் துணை செய்தல், துணி துவைத்தல், தண்ணீர் பிடித்துக் கொடுத்தல் போன்ற காரியங்களை ஆண்கள் செய்வது இழிவானது போலவும் ஆண் தன்மைக்கு எதிரானது எனவும் சிலர் கருதுகின்றனர். இது தவறாகும்.

● "நபி (ஸல்) அவர்கள் வீட்டில் என்ன (வேலை) செய்து வந்தார்கள்?□ என்று நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டாருக்காக (வீட்டு) வேலைகளைச் செய்து வந்தார்கள். தொழுகை அறிவிப்பை (பாங்கு சப்தத்தை)ச் செவிமடுத்தால் (தொழுகைக்காகப்) புறப்பட்டு விடுவார்கள்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் அஸ்வத் பின் யஸீத் (ரஹ்) நூல்: புகாரி *5363*

● வீட்டில் தமது செருப்பைத் தாமே தைப்பார்கள். தமது ஆடையின் கிழிசலையும் தாமே தைப்பார்கள். வீட்டு வேலைகளையும் செய்வார்கள்.

நூல் : அஹ்மத் *23756, 24176, 25039*

# பெண்களின் பாதுகாப்பிற்கே தலாக்

பெண்குழந்தை பிறந்தாலே இழிவு என்று கருக்கொலை செய்த உலகில்...

மீறிப்பிறந்தாலோ கள்ளிப்பால் கொண்டு கொன்றொழித்த உலகில்...

பெண்ணுக்கு ஆத்மா உண்டா என்று விவாதம் நடத்திய உலகில்...

கணவன் இறந்தபோது மனைவியை உயிரோடு கொளுத்திய உலகில்...

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று பெண்ணடிமையை போதித்த உலகில்…

பெண் உடலை வியாபார சரக்காக்கி அவள் அந்நியனின் கருவை சுமந்தபின் அபலைகளாக்கும் உலகில்..

அவளுக்கு அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பையும் கொடுத்து அரவணைப்பது இறைவனின் மார்க்கம் இஸ்லாம்!

அந்த இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளாத சிலர் ஆணுக்கு அளிக்கப்பட்டுள்ள தலாக் எனும் மனைவியை விவாகரத்துச் செய்யும் உரிமை பெண்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதி என்று சிலர் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

ஆணும், பெண்ணும் இல்லற இன்பத்தை அனுபவித்து, இரண்டறக் கலந்து விட்டுத் திடீரென ஆண்கள் தம் மனைவியை விவாகரத்துச் செய்து விடும் போது பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுவது கண்கூடு. கன்னிப் பெண்களுக்கே மண வாழ்வு கிடைக்காத நிலையில் விவாக விலக்குச் செய்யப்பட்டவளுக்கு மறு வாழ்வு எப்படிக் கிடைக்கும்? அதிலும் அவள் சில குழந்தைகளைப் பெற்று அழகையும் இளமையையும் இழந்தவள் என்றால் மறு வாழ்வுக்கு வாய்ப்பே இல்லை. இதுதான் தலாக் சட்டத்தை விமர்சனம் செய்வதற்குக் காரணம். தலாக் கூறுவதனால் பெண்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

## தலாக் ஏன் அனுமதிக்கப் படுகிறது?

தலாக்கை அனுமதிப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை? அதற்கு அனுமதி மறுப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை? என்று இரண்டையும் எடை போட்டுப் பார்க்கும் போது, அனுமதிப்பதால் ஏற்படும் விளைவுகளை விட அதிமோசமான விளைவுகள் அனுமதிக்காவிட்டால் ஏற்பட்டு விடுகின்றன. அனுமதிப்பதிலும் கேடுகள் உள்ளன் அனுமதி மறுப்பதிலும் கேடுகள் உள்ளன் இரண்டில் எதைச் செய்தாலும் விளைவுகள் மோசமானவை என்ற நிலையில் எது குறைந்த தீங்குடையதோ அதை அனுமதிப்பது தான்அறிவுடைமையாகும். இந்த அறிவுப் பூர்வமான முடிவையே இஸ்லாம் உலகுக்கு வழங்கியுள்ளது. தலாக் எனும் விவாகரத்துச் செய்யும் உரிமை ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் ஏற்படும் குறைந்த அளவிலான கேடுகளைப் பெரிதுபடுத்திப் பிரச்சாரம் செய்வோர் அந்த அதிகாரம் ஆண்களிடம் வழங்கப்படாவிட்டால் எவ்வளவு மோசமான விளைவுகள் ஏற்படும் அல்லது ஏற்படுகின்றன என்பதைக் கவனிப்பதில்லை.

## தலாக் மறுக்கப்பட்டால் என்ன நடக்கும்?

ஒரு கணவனுக்குத் தன் மனைவியை ஏதோ ஒரு காரணத்துக்காகப் பிடிக்காமல் போய் விடுகின்றது என்று வைத்துக் கொள்வோம். இஸ்லாம் கூறுவது போன்ற தலாக் உரிமை வழங்கப்படாத நாட்டிலும், சமுதாயத்திலும் கணவன் தன் மனைவியிடமிருந்து விவாக விலக்குப் பெற வேண்டுமானால் நீதிமன்றம் எனும் மூன்றாம் தரப்பை நாடிச் சென்று அந்த மன்றம்

அனுமதித்தாலே விவாக விலக்குப் பெற முடியும். நமது நாட்டிலும், மற்றும் சில நாடுகளிலும் இத்தகைய சட்டம்தான் இருக்கிறது. நீதி மன்றத்தை அணுகித்தான் விவாகரத்துப் பெற முடியும் என்றால் நீதிபதி நியாயம் என்று கருதக் கூடிய காரணங்களை கணவன் சொல்லியாக வேண்டும். அப்போதுதான் நீதிபதி விவாகரத்துக்கு அனுமதி வழங்குவார். இத்தகைய நிலையில் ஏற்படும் விளைவுகளை நாம் பார்ப்போம்...

### அ) வாழா வெட்டியாக இருக்கும் நிலை:

மனைவியைப் பிடிக்காத நிலையில் “விவாகரத்துப் பெறுவதற்காகக் காலத்தையும், நேரத்தையும், பொருளாதாரத்தையும் ஏன் வீணாக்க வேண்டும்“ என்று எண்ணுகின்ற ஒருவன், அவனுக்குப் பிடித்தமான மற்றொருத்தியைச் சின்ன வீடாக அமைத்துக் கொள்கிறான். கட்டிய மனைவியுடன் இல்வாழ்வைத் தொடர்வதுமில்லை. அவளைப் பராமரிப்பதுமில்லை. இவன் மாத்திரம் தகாத வழியில் தன் உணர்வுகளுக்குத் தீனி போட்டுக் கொள்கிறான். இவள் பெயரளவுக்கு மனைவி என்று இருக்கலாமே தவிர, பிடிக்காத கணவனிடமிருந்து இல்லற சுகம் அவளுக்குக் கிடைக்காது. வாழ்க்கைச் செலவினங்களும் கூட மறுக்கப்படும். இவை மிகையான கற்பனை இல்லை. நாட்டிலே நடக்கும் உண்மை நிகழ்ச்சிகள் தாம். மனைவி என்ற உரிமையோடு இதைத் தட்டிக் கேட்டால் அடி உதைகள்! இத்தகைய அபலைகள் ஏராளம்! பெயரளவுக்கு மனைவி என்று இருந்து கொண்டு அவளது உணர்வுக்கும், தன்மானத்துக்கும், பெண்மைக்கும் சவால் விடக் கூடிய வறட்டு வாழ்க்கையை வழங்கி, அவளைச் சித்திரவதை செய்வதைவிட அவனிடமிருந்து உடனடியாக விலகி சுதந்திரமாகத் தன் வாழ்வை அமைத்துக் கொள்வது எந்த வகையில் தாழ்ந்தது? என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

அதேநேரத்தில் தலாக் அதிகாரம் இருந்தால் இந்தக் கொடூர எண்ணம் கொண்ட ஆண் அவளை விடுவித்து விடுவான். அவளுக்கும் நிம்மதி அவள் விரும்பும் மறு வாழ்வையும் தேடிக் கொள்ளலாம். பெண்களின் மறுமணத்தை ஆதரிக்காதவர்கள் வேண்டுமானால் இந்தநிலையை எதிர்கொள்ளத் தயங்கலாம். இஸ்லாமியப் பெண் அவனிடமிருந்து விடுதலை பெற்ற உடனேயே மறு வாழ்வை அமைத்துக் கொண்டு மகிழ்வுடன் வாழ முடியும்.

### ஆ) அவதூறைச் சுமத்தல்

விவாகரத்துப் பெறுவதற்காக நீதி மன்றத்தை அவன் அணுகுகிறான். எந்த மாதிரியான காரணம் கூறினால் விரைந்து விவாகரத்து கிடைக்குமோ அது போன்ற காரணத்தைப் பொய்யாகப் புனைந்து கூறத் துணிகிறான். தன் மனைவி நடத்தை கெட்டவள் என்று நா கூசாமல் கூறுகின்றான். இதற்கான பொய்யான சாட்சிகளையும், சான்றுகளையும் தயார் செய்கின்றான்.அவனுக்குப் பிடிக்கவில்லை என்ற நிலையில் விவாகரத்தையும் அவன் பெற்று விடுவதோடு, அவளது கற்புக்கு களங்கத்தையும் ஏற்படுத்தி அவளுக்குத் தலைக் குனிவையும் ஏற்படுத்தி விடுகிறான். இத்தகைய இழிவைச் சுமந்து கொண்டு அவள் காலத்தைக் கழிப்பதை விடக் கௌரவத்தைக் காத்துக் கொண்டு ஆரம்பத்திலேயே அவனிடமிருந்து விடுதலை பெறுவது எந்த விதத்தில் மோசமானது என்பதையும் சிந்திக்க வேண்டும்.

### இ) அநியாயப் படுகொலை:

நீதிமன்றம் முடிவு செய்யும் வரை காத்திருக்கப் பொறுமை இல்லாதவன், அதற்காகப் பணத்தைச் செலவு செய்ய விரும்பாதவன், மற்றொரு வழியைத் தேர்ந்தெடுக்கிறான். இது முந்தைய இரண்டு வழிகளை விட மிகவும்

கொடுமையானது கொடூரமானது! பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தி விட்டு சமையல் செய்யும் போது ஏற்பட்ட விபத்து என்று நாடகமாடுகின்றான். இப்படிச் சாவூருக்கு அனுப்பப்பட்ட அபலைகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. ஸ்டவ் வெடித்து இளம் பெண் சாவு என்ற செய்திகளை நாம் அறிந்தே இருக்கிறோம்.

கணவனும், மனைவியும் தனித்திருப்பதை உலகம் அனுமதிப்பதால் அந்தத் தனிமையில் அவளை எது வேண்டுமானாலும் அவனால் செய்து விட முடியும். இது போன்ற கொடூரக் கொலைகளை நிரூபிக்கவும் முடியாமல் போய் விடுகின்றது. இந்தக் கொடுமைக்கு மாற்றுப் பரிகாரத்தைச் சொல்லி விட்டு தலாக்கை விமர்சிக்கட்டும்! ஆண்களின் கொடூரத்தை உணர்ந்த இஸ்லாம், பெண்களின் உயிரும், உடமையும், மானமும், மரியாதையும் காக்கப்பட வேண்டுமென்று கருதி “உனக்குப் பிடிக்காவிட்டால் அவளைக் கொன்று விடாதே! அவளது இல்லற சுகத்துக்குத் தடையாக இராதே! பிரச்சனை ஏதுமின்றி விவாக ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்!“ என்று வேண்டா வெறுப்புடன் தலாக்கை அனுமதிக்கிறது.

**விவாகரத்தில் விவேகம்**

தலாக்கை விமர்சிக்கக் கூடியவர்கள் மேலே எடுத்துக் காட்டிய இந்த மோசமான விளைவுகள் ஏற்படாத மற்றொரு பரிகாரத்தைக் காட்டட்டும்! அவர்களால் காட்ட முடியாது. காட்ட முடியாது என்ற நிலையில் அந்தப் படுமோசமான விளைவுகளிலிருந்து பெண்களை விடுவிக்கும் தலாக்கை - அது சிறிய தீங்கானதாகக் கருதப்பட்டாலும் - ஆதரித்தே ஆக வேண்டும். விவாகரத்துச் சட்டம் எளிமையாக்கப்பட வேண்டும் எனக் கூறுவதால் எடுத்தேன் கவிழ்த்தேன்“ என்று விவாகரத்துச் செய்யுமாறு இஸ்லாம் கூறவில்லை. அதற்கு முன் பல விஷயங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு வழிகாட்டுகிறது. கடைசி கடைசியாகவே தலாக் எனும் ஆயுதத்தைக் கையில் எடுக்க வேண்டும் எனக் கூறுகிறது.

# நபிமொழிகள்

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

- இறைவன் வானவர்களிடம் கூறுகிறான்: “என் அடியான் ஒரு தீமையைச் செய்ய நாடினால் அதை அவன் செய்யாதவரை அவனுக்கெதிராக அதைப் பதிவு செய்யாதீர்கள். அதை அவன் செய்தால் செய்த குற்றத்தை மட்டுமே பதிவு செய்யுங்கள். அதை அவன் எனக்காக விட்டுவிட்டால் அதை அவனுக்கு ஒரு நன்மையாகப் பதிவு செய்யுங்கள். அவன் ஒரு நன்மை புரிய எண்ணிவிட்டாலே அதைச் செய்யாவிட்டாலும் கூட அவனுக்கு ஒரு நன்மையை எழுதுங்கள். அதை அவன் செய்துவிட்டாலோ அதை அவனுக்கு பத்து நன்மைகளிலிருந்து எழுநூறு நன்மைகளாக எழுதுங்கள்”
(அறிவிப்பு: அபூ ஹுரைரா(ரலி) (புகாரி *2225.*)
- ”உங்களில் எவரும் மரணத்தை விரும்ப வேண்டாம். ஒன்று அவர் நல்லவராக இருப்பார் (அவர் உயிர் வாழ்வதன் மூலம் நன்மையை) அவர் அதிகமாக்கிக் கொள்ளலாம். அல்லது அவர் தீயவராக இருப்பார் அவர் (உயிர் வாழ்வதால்) மனம் திருந்தக்கூடும்” (அறிவிப்பு: அபூஹுரைரா(ரலி) (புகாரி *2211.*)
- ”உலர்ந்த திராட்சை போன்ற (சுருங்கிய) தலையுடைய அபிசீனிய (கறுப்பு நிற) அடிமையொருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் (அவரின் சொல்லைக்) கேளுங்கள் (அவருக்குக்) கீழ்ப்படியுங்கள் ” (அறிவிப்பு: அனஸ்(ரலி) புகாரி:*2199*)

# விவேகமான முறையில் விவாகரத்து

குடும்பங்களே சமூக அமைப்பின் அடித்தளங்களாகும். அவை உறுதியாக அமைவதைப் பொறுத்தே ஆரோக்கியமான சமூகம் உருவாகிறது. எந்த ஒரு நிறுவனம் ஆனாலும் தொழிற்சாலைகள், பாடசாலைகள் ஆனாலும் அதற்கு பொறுப்புவாய்ந்த தலைமை இருந்தால்தான் அவை ஒழுங்காகவும் ஆக்கபூர்வமானதாகவும் அமையும். அந்த வகையில் குடும்பம் என்ற நிறுவனத்திற்கு கணவனை பொறுப்புணர்வு கொண்ட தலைவனாக நியமிக்கிறது இஸ்லாம் என்ற இறைமார்க்கம்.

ஆண்களின் உடல் இயற்க்கைக்கு ஏற்றவாறு அவர்களுக்குச் சில சலுகைகளையும், கடமைகளையும் ஏற்படுத்திய இஸ்லாம், பெண்களின் இயற்க்கைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு வேறு விதமான கடமைகளையும்,சலுகைகளையும் வழங்குகின்றது.

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார். தன் பொறுப்புக்கு உட்பட்டவை பற்றி அவர் விசாரிக்கப்படுவார். ஆட்சித் தலைவரும் பொறுப்பாளரே! தன் தன் குடிமக்கள் பற்றி அவர் விசாரிக்கப்படுவார். ஆண்மகன் (குடும்பத் தலைவன்) தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான். தன் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான். பெண் (மனைவி) தன் கணவனின் வீட்டிற்கும் அவனுடைய குழந்தைகளுக்கும் பொறுப்பாளி ஆவாள். தன் பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து அவள் விசாரிக்கப்படுவாள். பணியாள் தன் எஜமானின் உடமைகளுக்குப் பொறுப்பாளியாவான். அவனும் தன் பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவான்“ (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) நூல்: புகாரீ *5200*

இருமனம் இணைந்து நடைபெறுவதே திருமணம் ஆனாலும் நாளடைவில் அவர்களுக்கு இடையே பல காரணங்களுக்காக மனக்கசப்பும் சச்சரவுகளும் உருவாக வாய்ப்புகள் உண்டு என்பதை நாம் அனைவரும் அறிவோம். அவ்வாறு பிணக்குகள் பிரச்சினைகள் உண்டாகும்போது வீட்டுக்குத் தலைவன் என்ற அடிப்படையில் கணவன் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இறைவன் கற்றுத் தருகிறான்:

**"...எந்தப் பெண்கள் விஷயத்தில் - அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் (அதிலும் திருந்தா விட்டால்) அவர்களைப் படுக்கையிலிருந்து விலக்கிவிடுங்கள் (அதிலும் திருந்தா விட்டால்) அவர்களை (இலேசாக) அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால், அவர்களுக்கு எதிராக எந்த வழியையும் தேடாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவனாகவும், வல்லமை உடையவனாகவும் இருக்கின்றான். (கணவன்-மனைவி ஆகிய) அவ்விருவரிடையே (பிணக்குண்டாகி) பிரிவினை ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் உறவினர்களில் இருந்து ஒருவரையும் மனைவியின் உறவினர்களில் இருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக ஏற்படுத்துங்கள் அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால், அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும்படி செய்து விடுவான் - நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனாகவும், நன்குணர்கிறவனாகவும் இருக்கின்றான்." (திருக்குர்ஆன் 4:34,35)**

**சொல்லித் திருத்துதல்:-**

இல்லற வாழ்வில் பிரச்சினையைச் சந்திக்கும் கணவன், மனைவியிடம்

பக்குவமாக அவளது குறைகளைச் சுட்டிக் காட்டி அவளது குடும்பக் கடமைகளை உணர்த்தி, குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி, தான் அவளைப் பராமரிக்கும் பொறுப்பில் இருப்பதையும் விவாகரத்தினால் அவள் சந்திக்க நேரும் பாதிப்புகளையும் இனிய மொழிகளால் எடுத்துரைக்க வேண்டும்.

● **'பிணக்கு ஏற்படும் என்று நீங்கள் அஞ்சினால் அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்' (அல்குர்ஆன் 4:34) என்று இறைவன் குறிப்பிடுகிறான்.**

**இப்போதனையிலிருந்து, பெண்கள் மட்டுமே தவறு செய்யக் கூடியவர்கள் என்றும் ஆண்களிடம் தவறே ஏற்படாது என்றும் கருதி விடக் கூடாது. ஏனெனில் இஸ்லாம் இதை விடவும் அழுத்தமாக ஆண்களுக்கு அறிவுரை சொல்லத் தவறவில்லை.'**

● **நீங்கள் மனைவியருடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் (அது முறையில்லை ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கலாம் நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அனேகநன்மைகளை அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கலாம்'. (அல்குர்ஆன் 4:19)** என்று இறைவன் கூறுகிறான்.

● *"நீங்கள் மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் ஏனெனில் அவர்கள் கோணலான விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவர்கள். நீங்கள்அதன் கோணலுடன் அவர்களைப் பயன் படுத்துவீர்களாயின் அது பலன் தரும். அன்றி அந்தக் கோணலை நிமிர்த்தப் பாடுபடுவீர்களாயின் நீங்கள் அதை ஒடித்து விடுவீர்கள்", என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். (நூல் புகாரி: 3331, 5186)*

● *"நீங்கள் உங்கள் துணைவிகளிடம் ஏதேனும் தீய குணங்களைக் கண்டால் உடனே அவர்களை வெறுத்து விடாதீர்கள். நீங்கள் கவனிப்பீர்களாயின், அவர்களிடம் வேறு நல்ல குணங்களைக் காண்பீர்கள்!" என்றும் நபி (ஸல்) அவர்கள் சிறந்த அறிவுரையைக் கூறியுள்ளனர்.(நூல் முஸ்லிம்: 2672)*

## தள்ளி வைத்துத் திருத்தல்:-

இனிய மொழியில் எடுத்துரைத்தும் மனைவி தன் போக்கிலிருந்து திருந்தாத போது, அடுத்த கட்டமாக, தனது அதிருப்தியையும், அவள் மீதுள்ள கோபத்தையும் வெளிப்படுத்துவதற்காகவும், தாம்பத்ய உறவின் தேவையை அவளுக்கு உணர்த்துவதற்காகவும், நிரந்தரமாகவே பிரிய நேரிடும் என்பதை அவளுக்கு புரியவைப்பதற்காகவும் அவளுடன் தாம்பத்திய உறவு கொள்வதைத் தற்காலிகமாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

● **'அவர்களைப் படுக்கையிலிருந்து (தற்காலிகமாக) விலக்கி விடுங்கள்' (அல்குர்ஆன் 4:34)** என்று இறைவன் அடுத்த அறிவுரையை வழங்குகிறான்.

தன் மீது கணவன் மோகமும், இச்சையும் கொண்டிருக்கிறான் தன்னை அவனால் தவிர்க்க முடியாது என்று பெண் இயல்பாகவே இறுமாந்திருக்கிறாள். இந்த நிலையில், அவளது பெண்மையும், அண்மையும் கணவனால் புறக்கணிக்கப்படும் போது, அவளது தன்மானம் சீண்டப் படுவதையும் தனது உறவைக் கணவனால் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதையும் தெளிவாக உணரும் போது, நிலைமையின் விபரீதத்தை அவள் புரிந்து கொள்ள முடியும். இதனால் தலாக் தவிர்க்கப்பட்டு குடும்பத்தில் சுமூக உறவு ஏற்படலாம்.

## அடித்துத் திருத்துதல்:

மேற்சொன்ன இரு நடவடிக்கைகளும் கூட மனைவியிடம் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையாயின் மூன்றாவது நடவடிக்கையாக அவளை அடித்துத்

*திருத்த இஸ்லாம் அனுமதிக்கிறது!"*

**● அவர்களை (இலேசாக) அடியுங்கள்' (அல்குர்ஆன் 4:34)**

அடித்தல் என்று சொன்னால், பலவீனமான பெண் மீது தனது பலத்தைப் பிரயோகிப்பதோ அல்லது மிருகங்களை அடிப்பது போன்றோ அடிப்பது என்று அர்த்தமில்லை. மனைவியை அடிக்க வேண்டிய சில கட்டங்கள் வாழ்க்கையில் வந்தால் அது போன்ற கட்டங்களில் கன்னத்தில், முகத்தில் அறைந்து விடக் கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தருகின்றார்கள். அதனால் மனைவியை அடிப்பதற்கு இந்த ஹதீஸ் ஏகபோக உரிமை அளித்துள்ளது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

● "நீங்கள் உங்கள் மனைவியரை அடிமையை அடிப்பது போல் அடிக்க வேண்டாம். பிறகு அதே நாளின் இறுதியில் அவளுடனேயே உறவு கொள்வீர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஸம்ஆ (ரலி) நூல் : புகாரி 4942, 5204*

கணவனால் அடிக்கப்பட்டால், கணவன் எதற்கும் தயாராக இருப்பதைப் புரிந்து கொள்கிறாள். இதனால் அவளது போக்கில் நிச்சயமாக மாற்றம் ஏற்பட்டு விவாகரத்துச் செய்யப்படும் நிலை தவிர்க்கப்படுகிறது. விவாகரத்து என்ற அளவுக்குச் செல்வதைத் தடுக்கவே இலேசாக அடிக்க இஸ்லாம் அனுமதிக்கிறது

**ஜமாஅத் தீர்வு:**

கணவன் மனைவியருக்கிடையேயுள்ள பிணக்கு மேற் சொன்ன மூன்று நடவடிக்கைகளுக்குப் பின்னரும் தொடருமானால் அவர்கள் பிரச்சனையில் ஜமாஅத் (முஸ்லிம்களின் கூட்டமைப்பு) தலையிடும்.

**● அவ்விருவரிடையே பிளவு ஏற்படும் என்று நீங்கள் அஞ்சினால் அவன் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும், அவள் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும் அனுப்புங்கள்! அவ்விருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவருக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவான். அல்லாஹ் அறிந்தவனாகவும், நன்றாகவே அறிந்தவனாகவும் இருக்கிறான்.(அல்குர்ஆன் 4:35)**

எந்தப் பிரச்சனையிலும் சம்மந்தப்பட்டவர்களே பேசித் தீர்க்க விரும்பினால் பெரும்பாலும் தீர்வு ஏற்படுவதில்லை. ஏனெனில் உணர்வுப் பூர்வமாகப் பிரச்சனையை அணுகுவதால் சில வேளை சிக்கல் மேலும் முற்றிப் போகலாம். தத்தம் நிலையிலேயே பிடிவாதமாக இருவரும் நிற்பர். தம்பதியர் உறவும் இதில் விதிவிலக்கில்லை. இதன் காரணமாக இந்தப் பிரச்சனையில் நேரடித் தொடர்பில்லாத, ஆனால் தம்பதியர் இணைந்து மகிழ்ச்சியாக வாழ்வதில் அக்கறையும், ஆசையும் கொண்ட அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே நடுவர்களாக நியமித்துச் சிக்கலைத் தீர்க்க முயல வேண்டும். இதனால் தம்பதியர் தரப்புக் குற்றச் சாட்டுக்கள், விருப்பு வெறுப்பற்ற, ஒரு தலைப்பட்சமற்ற கோணத்தில் அணுகப்பட்டு, சுமூகமான தீர்வு காணப்படும். இதனால் தலாக் தவிர்க்கப்படும்.

இந்த நான்கு நடவடிக்கைகளாலும் கூட இணக்கம் ஏற்படவில்லையானால் அவர்கள் இணைந்து வாழ்வதில் அர்த்தமேயில்லை! இந்நிலையில் வேறு வழி ஏதுமின்றி தலாக்கை இஸ்லாம் அனுமதிக்கிறது. இப்போதும் கூட நிரந்தரமாகப் பிரிந்து விடும் வகையில் தலாக்கை அனுமதிக்கவில்லை. மாறாக, அவர்கள் இணைந்து வாழ்வதற்கு மற்றொரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக இரண்டு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இறைசட்டங்களின் மகிமை

# சவுதியில் இளவரசருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

செய்தி: அக்டோபர் 19, 2016 - தமிழ் நாளிதழ்கள்

சவுதி அரேபியாவில் தன்னுடைய சக நண்பரை கொலை செய்த குற்றத்துக்காக இளவரசர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. 2012-ஆம் ஆண்டு இளவரசர் அல்-கபீருக்கும், அவரது நண்பரான அதெல் அல் மகிமத்துக்கு இடையே நடந்த வாக்குவாதத்தில் இளவரசர் மகிமத்தை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இதில் கைது செய்யப்பட்ட இளவரசர் கபீருக்கு 2014-ம் ஆண்டு சவுதி ரியாத் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது.

இளவரசரின் மரண தண்டனை தொடர்பாக சவுதி உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ”இளவரசர் கபீர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். எனவே சவுதியில் நீதியை நிலைநாட்ட அல்லாஹ் பரிந்துரைத்த விதிகளின்படி நடவடிக்கைகளை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது” என கூறப்பட்டுள்ளது.

**மேற்படி செய்தியில் கவனத்துக்குரிய விடயங்கள்:**

● அரசனானாலும், ஆண்டியானாலும் இறைவனுடைய சட்டத்தில் எவ்வித சமரசமும் இல்லை என்பதை சவூதி அரேபியா உலகத்திற்கு பிரகடனம் செய்துள்ளது.

● பொதுவாக, ஒரு மரண தண்டனை நிறைவேற்றப்படுமாயின்... கீழ்கோர்ட், ஹை கோர்ட் அப்பீல், சுப்ரீம் கோர்ட் அப்பீல் எல்லாம் தீர்ந்துபோய்... கட்டக்கடைசியாக... நம் நாட்டு சட்டத்தில்... குற்றவாளியின் கருணை மனுவை ஜனாதிபதி நிராகரிப்பதுதான்... தண்டனை நிறைவேற்றலுக்கான இறுதித்தீர்ப்பு அல்லவா..?

ஆனால் இங்கு இஸ்லாமிய குற்றவியல் சட்டப்படி அப்படியான ஜனாதிபதி ஸ்தானத்தில் “மன்னிப்பு கோருகின்ற கருணை மனுவை நிராகரிக்கும்“ உச்சபட்ச அதிகாரம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது கொலை செய்யப்பட்டவரின் (பெற்றோர், குழந்தைகள், உடன்பிறந்தோர் போன்ற) இரத்த சொந்தங்கள் மன்னித்தால் மட்டுமே இட்ட மரண தண்டனை கூட ரத்தாகும். சுப்ரீம் கோர்ட் உத்தரவை செயல்படுத்த மன்னர் கட்டளையிட்டிருந்தாலும் இது சாத்தியமே.

● இந்த இரத்த சொந்தங்கள், கொலையாளியின் சொத்தின் அடிப்படையில் பலசுற்று பேரம் நடத்தி பெரும்பணம் கேட்டு பெற்றுக்கொண்டும் மன்னிக்கலாம். அல்லது, மறுமை நன்மைக்காக ஏதுமே வாங்காமல் சும்மாவும் மன்னிக்கலாம். ஆனால் சவூதி அரச குடும்பம் தர முன்வந்த நஷ்ட ஈட்டு தொகையை (இதற்கு இரத்தப்பணம் (BloodMoney) என்று பெயர்) கொலை செய்யப்பட்டவரின் இரத்த சொந்தங்கள் வாங்க மறுத்துவிட்டன,

# வாசகர் எண்ணம்

● துவக்கப் பள்ளியில் பயிலும் மழலைக் குழந்தைக்கும் விளங்கும் வண்ணம் விளக்கமாக வரைபடமிட்ட உணவுச்சங்கிலி பற்றிய முகப்பு அட்டைப்படம் அருமை! இயற்க்கை இறைநெறியாம் இஸ்லாத்திற்கு களங்கம் கற்பிக்கத் துடிக்கும் சகோதர மனிதர்களுக்கும் இறைவனின் நேர்வழி கிடைக்க வேண்டும் என்ற உணர்வே என்னுள் மேலோங்குகிறது.

**– ஏ. அப்துல் சமத், அரவக்குறிச்சி**

# இஸ்லாமியக் குற்றவியல் சட்டங்கள்

இஸ்லாமியக் குற்றவியல் சட்டங்களே மனித குலத்திற்கு மிகவும் நன்மை பயக்கும் சட்டங்கள் என்பதை நமது நாட்டின் சட்டங்களோடு ஒப்பீடு செய்யும்போது விளங்கும்.

குற்றவாளிகளை தண்டிப்பதன் நோக்கம் குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யாமல் தடுத்தல், மற்றவர்களுக்கு படிப்பனையாக இருத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்குவதில் இருந்து தடுத்தல் என்பவையே ஏன் அறிவோம். அதற்காகத்தான் சிறைச் சாலைகள், காவல் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## பலவீனமான மனித சட்டங்கள்

ஆனால் நம் நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றில் இயற்றப்பட்டுள்ள குற்றவியல் சட்டங்களால் குற்றங்களைக் குறைக்க இயலவில்லை.

இன்று திருட்டு, கற்பழிப்பு, கொலை, கொள்ளை, இன்ன பிற குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளுக்கு வழங்கப்படும் தண்டனை என்ன? சில மாதங்களோ, சில வருடங்களோ சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது. மேலும் குற்றவாளிகளுக்கு சிறைச்சாலைகளில் செய்து தரப்படுகின்ற வசதிகள் குற்றங்களை அதிகப்படுத்தவே வழிவகுக்கின்றன. அத்தனையும் மக்களின் வரிப்பணத்தில் -இதில் பாதிக்கப்பட்டவர்கள் செலுத்திய வரியும் அடங்கும்.

இந்தப் பெயரளவிலான தண்டனையால் ஒரு பயனும் ஏற்படாது ஏற்படவில்லை என்பது கண்கூடு. மாறாக குற்றவாளிகளை குற்றங்களில் நீடிப்பதை ஊக்குவிக்கவே செய்கின்றன. சட்டம், நீதி, நீதிமன்றங்கள், காவல்நிலையங்கள் இவையெல்லாம் கேலிக்குரியவையாக ஆகிவிட்டதால்தான் குற்றவாளிகள் இன்று குற்றவாளிகள் சிரித்த முகத்தோடு உலவுவதையும் நாட்டின் சட்டமன்றங்களில் கோலோச்சுவதையும் நாடாள்வதையும் நாம் காணமுடிகிறது.

ஆண்டு தோறும் குற்றவாளிகள் பெருகி வருகின்றார்கள் குற்றங்கள் பெருகுகின்றன் குற்றவாளிகளை அதிகப்படுத்துவதற்காக மக்களின் வரிப் பணம் பாழாக்கப்படுகின்றது.

## பாதிக்கப்பட்டவர் உணர்வுகள்:

திருடியவனை என்ன செய்யலாம் என்று திருட்டுக் கொடுத்தவனிடம் கேட்டால் ”ஆறு மாதம் சோறு போடலாம்“ எனக் கூற மாட்டான். கொலையாளியை என்ன செய்ய வேண்டும் என கொல்லப்பட்டவனின் மகனிடம் கேட்டால் ”பதினான்கு வருடம் அரசாங்கச் செலவில் அவனைப் பராமரிக்க வேண்டும்“ என்று கூறுவானா? இல்லை, தலையைச் சீவ வேண்டும் என்பானா? கற்பழிக்கப்பட்டவள், அதனால் தனது எதிர்காலமே இருண்டு விட்ட நிலையில் கற்பழித்தவனுக்கு எத்தகைய தண்டனை கொடுத்தால் மனம் நிறைவடைவாள்? இப்படி பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவனின் நிலையிலிருந்து பார்க்காமல் பாதிக்கப்படாத இடத்தில் அமர்ந்து கொண்டு சட்டங்கள் இயற்றப்படுவதால் தான் பாதிக்கப்பட்டவனின் உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இஸ்லாமோ இதைக் கவனத்தில் கொள்கிறது.

ஒருவன் பத்துப் பேரை கொலை செய்து தூக்குத் தண்டனை பெறுகிறான். அவனது தண்டனையைக் கருணை மனுவின் அடிப்படையில் ரத்துச் செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது உலகின் பல நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களுக்கு குடியரசுத் தலைவர் மாமனோ, மச்சானோ அல்ல என்றாலும் அந்த அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டிருப்பதிலிருந்து பாதிக்கப்பட்டவனின் நிலையைச் சட்டம் கடுகளவும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம்.

மனிதனாக இயற்றிய சட்டங்கள் ஏற்படுத்திய விளைவுகள் இவை. ஆனால் இறைவன் தரும் குற்றவியல் சட்டங்கள் மேலே கூறப்பட்ட தண்டனையின் நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றும் வண்ணம் அமைந்துள்ளன.

## இஸ்லாமியச் சட்டம் என்ன கூறுகிறது?

ஒருவன் மற்றொருவனின் கண்ணைக் குருடாக்கி விட்டால், இஸ்லாத்தில் இதற்கான தண்டனை குற்றவாளியின் கண்ணையும் குருடாக்கிட வேண்டும். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது இஸ்லாத்தின் குற்றவியல் சட்டம்.

கண்ணை இழந்தவன் குற்றவாளியை மன்னித்து விட்டால் குற்றவாளி தண்டிக்கப்பட மாட்டான். அல்லது குற்றவாளியிடம் இழப்பீட்டைக் கோரிப் பெற்றுக் கொண்டாலும் குற்றவாளி தண்டிக்கப்பட மாட்டான்.

அது போலவே கொல்லப்பட்டவரின் வாரிசுகளில் யாரேனும் ஒருவர் குற்றவாளியின் உயிரை எடுக்க வேண்டாம் என்று கூறினால் கூட குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்படாது. இது இஸ்லாமியச் சட்டம்.

அதாவது உலக நாடுகள் குடியரசுத் தலைவருக்கு வழங்கிய அதிகாரத்தை, பாதிக்கப்பட்டவனுக்கு இஸ்லாம் அளிக்கிறது.

சட்டங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை நியாயமான சிந்தனையுடைய யாரும் மறுக்க முடியாது. பாதிக்கப்பட்டவன் மனநிறைவு பெறும் வகையில் தண்டனை அளிக்கப்படாவிட்டால் பாதிக்கப்பட்டவனே குற்றவாளியாகும் நிலைமையும் உருவாகும்.

கொலைக் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டவன் ஜாமீனில் விடப்படும்போதும், சிறைச் சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும்போதும் கொல்லப்பட்டவனின் உறவினர்கள் அவனைக் கொன்று விடுவதைப் பார்க்கிறோம்.

இந்த நிலைமைக்கு என்ன காரணம்? ”கொலையாளியை இந்தச் சட்டங்கள் தண்டிக்காது. தண்டித்தாலும் அது போதுமானதாக இருக்காது“ என்ற எண்ணத்தின் காரணமாகவே கொலை செய்யப்பட்டவனின் உறவினர்களும் கொலையாளிகளாகி விடுகின்றனர். குற்றங்கள் அதிகரிப்பதற்கு இதுவும் முக்கியக் காரணமாக உள்ளது எனலாம்.

இன்று நம் நாட்டை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொலை, கொள்ளை, விபச்சாரம், இலஞ்சம், ஊழல், சுரண்டல், பொதுச் சொத்துக்கள் கொள்ளையடித்தல், பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்துதல் இன இவை அனைத்தும் முடிவுக்கு வரவேண்டுமானால் எண்ணற்ற ஓட்டைகள் கொண்ட மனித சட்டங்களை ஒதுக்கிவைத்து விட்டு நம்மைப் படைத்த இறைவன் நமது நன்மைக்காக வேண்டி அருளிய சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அப்போதுதான் மக்கள் பாதுகாப்பு உணர்வு பெறுவார்கள். மக்கள் ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடவும் முடியும்.

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு ஞுஆஞு அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் ஞுஆஞு மூலம் சுநுளுநுனு ஞுஆ என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை:9894442844, 8122264467(மயிலாப்பூர்),
9840572018(நுங்கம்பாக்கம்), 9840527687(பல்லாவரம்),
9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 தர்மபுரி:9842627171
கோவை:9600800050 திருப்பூர்:9150068919 பொள்ளாச்சி:8526257345
குன்னூர்:9843622246 ஊட்டி:9843927014 ஈரோடு:7373947869,
9942958888 உடுமலை:9865051917 சேலம்:9994091364
திருச்சி:9865446344 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160
விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030
அதிராம்பட்டினம்:9629226639 தென்காசி :9443695979
வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190
திருவண்ணாமலை:9994564650 தூத்துக்குடி:8148059038
இளையான்குடி: 9842081210 அருப்புக்கோட்டை:9865683224

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308

(PRINTED MATTER)

To

# பதவி ஆசை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● ‘ஓர் அடியானுக்குக் குடிமக்களின் பொறுப்பை இறைவன் வழங்கியிருக்க, அவன் அவர்களின் நலனைக் காக்கத் தவறினால், சொர்க்கத்தின் வாடையைக் கூட அவன் பெறமாட்டான்‘ என்று சொல்ல கேட்டேன்“ (புகாரி 2201)

● ‘முஸ்லிம் குடிமக்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் ஒருவர் அவர்களுக்கு மோசடி செய்த நிலையில் இறந்துவிடுவாரனால், சொர்க்கத்தை அவருக்கு அல்லாஹ் தடை செய்துவிடுகிறான்‘ (புகாரி 2202)

● ’நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய பேராசைப்படுகின்றீர்கள். ஆனால், மறுமை நாளில் அதற்காக வருத்தப்படுவீர்கள். பாலூட்டுபவைகளிலேயே பதவி(ப் பால்) தான் இன்பமானது. பாலை மறக்க வைப்ப(தன் துன்பத்)திலேயே பதவி(ப் பாலை நிறுத்துவது)தான் மோசமானது’ அறிவித்தார். (புகாரி 2200)